**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 3/2019

**வாக்குமூலம்.வா.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜான் போஸ்கோ | தொழில் | |
| த/பெ. | சின்னப்பன் | வயது | 38 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 16.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாவா வழக்கில் தரப்பினர் இல்லை. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வழக்கின் வாதி யா ர் என்று தெரியும். வழக்கு வாதிகள் பெயர், ராஜாங்கம் மற்றும் செல்வம் ஆகும். வாதிகள் என்னிடம் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. இன்று நீதிமன்றத்திற்கு என்னை வாதி அழைத்து வந்தாரா என்றால் நானாகத்தான் வந்தேன். வாதி தாவா வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு இருக்கிறார் என்றால் அவர்களுடைய இடத்தைப்பற்றி கேட்டு இருக்கிறார்கள். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்பதை என்னால் குறிப்பாக சொல்லமுடியாது என்றால் அவர்களுடைய இருக்கும் இடத்திற்கும் வயலுக்கும் பரிகாரம் கேட்டுள்ளார்கள். என்ன பரிகாரம் என்று குறிப்பாக தெரியும் என்றால் தெரியும். வாதிகள் இருந்த இடம் அவர்களுக்கு வேண்டும் என்று கேட்டுள்ளார்கள்.

2. வாதிகள் தாவா வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியாது. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் தாவா சொத்து வாதிகளுக்கு கூட்டு அனுபவம் உள்ள சொத்து என்று சொல்லி இருப்பதற்கு என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் ஆவணம் பார்க்கவில்லை 20 வருடங்களாக அவர்கள் இருப்பது தெரியும். தாவா 2வது அயிட்ட சொத்து 2ம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் அதுப்பற்றி தெரியாது. 2ம் பிரதிவாதி மாரிமுத்துக்கோனார் தாவா 2வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்று அவருடைய அனுபவத்தில் தான் இருக்கிறது என்றால் தெரியும். தாவா 2வது அயிட்ட சொத்து கிரைய அடிப்படையில் மாரிமுத்துக்கோனார் அனுபவத்தில் தான் இருக்கிறது என்றால் சரியல்ல வாதிகள் அனுபவத்தில் இருக்கிறது. நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு எப்படி பாத்தியம் என்பதை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அண்ணாமலைக்கு வழக்கு சொத்து எந்த அடிப்படையில் பாத்தியம் என்பது எனக்கு தெரியாது. அண்ணாமலை வாதிகளின் தகப்பனார் என்பது மட்டும் தான் எனக்கு தெரியும். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அண்ணாமலை சுப்பிரமணியபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 04.05.1990 தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்து என்ற விபரம் எனக்கு தெரியாது. 1990ஆம் ஆண்டு வாதிகளின் வயது என்ன என்பது எனக்கு தெரியாது. எனக்கு தற்போது 38 வயது ஆகிறது. தாவா 2வது அயிட்ட சொத்தின் புலஎண் தெரியாது. விஸ்தீர்ணமும் தெரியாது.

2. வழக்கு 2வதுஅயிட்ட சொத்தை 2ம் பிரதிவாதி மாரிமுத்துக்கோனார் 08.05.1995ல் சுப்பிரமணியபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெறப்பட்ட விசயம் எனக்கு தெரியாது. 1வது அயிட்ட சொத்தை 1ம் பிரதிவாதி 2அயிட்ட சொத்தை 2ம் பிரதிவாதியும் முறையாக கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் நான் வாதிகளுக்கு வேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்து என்றால் பாட்டனார் சொத்து ஆகும். தாவா சொத்து பூர்வீக சொத்து என்று நான் சொல்லியிருப்பது சம்மந்தமாக எந்த விதமான வருவாய் ஆவணமும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக நான் சொல்லக்கூடிய சாட்சியம் ஏற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**